வேலூர் மாவட்டம் - அலகுத் தேர்வு -2017 தமிழ் வினாத்தாள்

# 10ம் வகுப்பு அலகுத் தேர்வு

## தமிழ் (அலகுத் தேர்வு –1)

## ஜூலை 2017

## தமிழ் முதல் தாள் (1)

நேரம் – 1 ½ மணி

மதிப்பெண் = 50

❖ இயல் –1

இயல் –2

(உரைநடை, செய்யுள்)

| | | |
|---|---|---|
| I. | சரியான விடை எழுதுக | – 3 |
| II. | கோடிட்ட இடங்கள் | –3 |
| III. | பொருத்துக | –2 |
| IV. | விடைக்கேற்ற வினா | –2 |
| V. | குறுவினா (5x2) | –10 |
| VI. | சிறுவினா (3x4) | –12 |
| VII. | நெடுவினா | – 8 (1 x8) |
| VIII. | உரைபத்தி வினாக்கள் | –5 |
| IX. | மனப்பாட பாடல் | –5 |
| | | 50 |

Scanned by CamScanner

Reg. No. | | | | | | |

# முதல் அலகுத் தேர்வு, ஜுலை - 2017

பத்தாம் வகுப்பு]

தமிழ் - முதல் தாள்

[காலம் : 1-30 மணி

(மொத்த மதிப்பெண்கள் : 50)

I உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக : 3×1=3

1. 'இணையில்லை முப்பாலுக்கு இந்நிலத்தே' எனப் பாடியவர் ------
அ) பாரதியார் ஆ) சுரதா இ) பாரதிதாசன்
2. நாடகக் காப்பியம் எனப் போற்றப்படும் நூல் ------.
அ) சிலப்பதிகாரம் ஆ) மணிமேகலை இ) வளையாபதி
3. இன்றைய மதுரையில் ----- தமிழ்ச்சங்கம் இருந்தது.
அ) முதலாம் ஆ) இரண்டாம் இ) மூன்றாம்

II கோடிட்ட இடத்தை நிரப்புக : 3×1=3

4. மாணிக்கவாசகர் கட்டிய கோவில் ---- உள்ளது.
5. தமிழியக்கம் என்னும் நூலின் ஆசிரியர் ------.
6. தமிழர்களிடம் இன்று பரவியுள்ள ----- ஒன்று உண்டு.

III பொருத்துக : 4×½=2

7. விரை - உடல்
8. கழல் - பெருகி
9. ததும்பி - மணம்
10. மெய் - அணிகலன்

IV விடைக்கேற்ற வினா அமைக்க : 2×1=2

11. பெண்கள் உரிமைப்பெற்று புது உலகைப் படைக்க வேண்டும் என்று விரும்பியவர் பெரியார்.
12. இயல், இசை, நாடகம் என்னும் முப்பெரும் பிரிவுகளைக் கொண்டது தமிழ்.

V ஏவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி : 5×2=10

13. ஞானம் கருதினும் கைகூடும் எப்போது ?
14. கொக்கை உவமையாகக் காட்டி வள்ளுவர் விளக்கும் கருத்து யாது ?
15. திருவள்ளுவருக்கு வழங்கும் வேறு பெயர்கள் யாவை ?
16. பழியில்லா மன்னனாய் வாழ்பவனின் பண்புகளைக் கனிமேதாவியார் குறிப்பிடுவன யாவை ?
17. தொல்காப்பியம் குறித்து முனைவர் எமினோ கூறுவது யாது ?
18. மொழிக்குரிய செவ்வியல் தன்மைகள் யாவை ?
19. ஒழுக்கம் குறித்துப் பெரியார் கூறுவன யாவை ?

VI ஏவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளி : 3×4=12

20. சிலப்பதிகாரம் காட்டும் சோழநாட்டு மன்னர்களின் சிறப்புகள் யாவை ?
21. செந்தமிழைச் செழுந்தமிழாய் செய்வதற்கு பாரதிதாசன் கூறும் வழிகள் யாவை?
22. பெண்கல்வி குறித்து பெரியார் கூறுவன யாவை ?
23. மணக்கொடை குறித்துப் பெரியார் கூறுவன யாவை ?
24. வாயிற்காவலன் பாண்டிய மன்னனை எவ்வாறு வாழ்த்தினான் ?

VII ஏதேனும் ஒரு வினாவிற்கு விடையளி : 1×8=8

25. ஒழுக்கமுடைமைப் பற்றி வள்ளுவர் கூறும் கருத்துக்களைத் தொகுத்தெழுதுக.
26. செம்மொழிக்குரிய ஏவையேனும் ஐந்து தகுதிப்பாடுகளை விளக்கி எழுதுக.

VIII கீழ்காணும் உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளி : 5×1=5

27. பெரியார் சமூக முரண்களையும் மூடக் கருத்துக்களையும் எதிர்த்தவர். தொலை நோக்குப் பார்வையுடையவர். பகுத்தறிவுக்குப் பொருந்தாதவற்றை அறுத்து எறிந்தவர். சமூக மாற்றத்தை விரும்பியவர். பெண்களே சமூகத்தின் கண்கள் எனக் கருதியவர். பெண்களை அடிமைத்தனத்திலிருந்து மீட்டவர். பெரியார் வழிகாட்டுதலால் தமிழகம் இன்று தலைநிமிர்ந்து நிற்கிறது.
அ) பெரியார் எதை எதிர்த்தவர் ?
ஆ) பெரியார் யாரை சமூகத்தின் கண்கள் என்றார் ?
இ) பகுத்தறிவுக்குப் பொருந்தாதவற்றை பெரியார் என்ன செய்தார் ?
ஈ) பெண்களை அடிமைத்தனத்திலிருந்து மீட்டவர் யார் ?
உ) இவ்வுரைக்குப் பொருத்தமான தலைப்பைத் தருக.

IX அடி பிறழாமல் எழுதுக : 3+2=5

28. மெய்தான்...... எனத் தொடங்கும் வாழ்த்து.
29. நன்றிக்கு..... எனத் தொடங்கும் குறட்பா.

Scanned by CamScanner

# 10ம் வகுப்பு அலகுத் தேர்வு

## தமிழ் இரண்டாம் தாள் (2)

## ஜுலை 2017

நேரம் – 1 ½ மணி

மதிப்பெண் = 50

- இயல் –1

  இயல் –2

- அணி (இயல் –10)

(தற்குறிப்பேற்ற அணி, வஞ்சப்புகழ்ச்சி அணி)

(இலக்கணம், வாழ்வியல் திறன், அரசு– தமிழ் எண்ணுருக்கள், பழமொழிகள், கட்டுரை, கூட்டு விண்ணப்பம்)

தமிழாக்கம் –பிறமொழி (ஆங்கில) சொற்களை தமிழில் எழுதுதல்

| | | |
|---|---|---|
| I. | சரியான விடை எழுதுக | – 3 |
| II. | கோடிட்ட இடங்கள் | –3 |
| III. | கருக்கமான விடையளி | –4 (4 x1) |
| IV. | குறுவினா | –10 (5x2) |
| V. | அணி | –5 ( 1 x5) |
| VI. | துணைப்பாட வினா | –5 (1x5) |
| VII. | ஆங்கில சொல் –தமிழாக்கம் | – 3 ( 1 x3) |
| VIII. | வாழ்வியல் சூழல் | –3 (3 x1) |
| IX. | அரபு எண்கள்–தமிழ் எண்கள் | –2 (4 x1/2 ) |
| X. | இணையான தமிழ் பழமொழி | –2 (2 x1) |
| XI. | பொதுக்கட்டுரை/கடிதம் | –10(1 x10) |
| | | 50 |

Scanned by CamScanner

கல்வி அமுது

Reg. No. [ ]

# முதல் அலகுத் தேர்வு, ஜூலை - 2017

பத்தாம் வகுப்பு] தமிழ் - இரண்டாம் தாள் [காலம் : 1-30 மணி

(மொத்த மதிப்பெண்கள் : 50)

I உரிய விடையைத் தேர்ந்து எடுக்க : 3×1=3

1. வளையல் இச்சொல்லில் ஐகாரம் ---- மாத்திரை அளவு ஒலிக்கும்.
   அ) ஒரு ஆ) இரண்டு இ) ஒன்றரை
2. பொதுமொழிக்கு எடுத்துக்காட்டு --------.
   அ) தாமரை ஆ) குதிரை இ) படம் பார்த்தான்
3. முள்+தீது என்பது ----- எனப் புணரும்.
   அ) முஃறீது ஆ) முள்தீது இ) முஃடீது

II கோடிட்ட இடத்தை நிரப்புக : 3×1=3

4. மெய்யெழுத்து ----- மாத்திரை அளவு பெறும்.
5. ஒரு சொல் தனித்து நின்று பொருள் தருவது ------.
6. தொழிலைக் குறிக்கும் சொல் -------.

III சுருக்கமாக விடையளிக்க : 4×1=4

7. நேற்று புயல் வீசியது, பள்ளிக்கு விடுமுறை (கலவைத் தொடராக மாற்றுக)
8. வலது பக்கம் சுவறில் எழுதாதே. (வழூஉச் சொற்களைத் திருத்தி எழுதுக)
9. அவர்கள் இருவருக்கும் இடையே விவாதம் நடந்தது.
   (பிறமொழிச் சொற்களைள நீக்கி எழுதுக)
10. முக்கனி (தொகைச் சொற்களை விரித்து எழுதுக)

IV எவையேனும் ஐந்தனுக்கு மட்டும் விடையளி : 5×2=10

11. ஐகாரக்குறுக்கம் என்றால் என்ன ? (எ.கா.) தருக.
12. ஔகாரக் குறுக்கத்தைச் சான்றுடன் விளக்குக.
13. மகரம் எவ்வெவ்விடங்களில் குறுகும் ? (எ.கா.) தருக.
14. மொழியின் வகைகள் யாவை ?
15. வினைச் சொல் என்றால் என்ன ?
16. பெயரெச்சம் என்றால் என்ன ? அதன் வகைகள் யாவை ?
17. முற்றெச்சம் என்றால் என்ன ? சான்று தருக.

V எவையேனும் ஒரு வினாவிற்கு விடையளி : 1×5=5

18. தற்குறிப்பேற்ற அணியைச் சான்றுடன் விளக்குக.
19. வஞ்சப் புகழ்ச்சி அணியைச் சான்றுடன் விளக்குக.

VI எவையேனும் ஒரு வினாவிற்கு விடையளி : 1×5=5

20. பரிதிமாற்கலைஞரின் தமிழ்ப்பற்றை விளக்குக.
21. கமலநாதன் எவ்வாறு மனம் திருந்தினான் என்பதை விளக்குக.

VII பின்வரும் உரைப்பத்தியில் உள்ள ஆங்கிலச் சொற்களைத் தமிழில் எழுதுக : 1×3=3

22. டாடி சண்டே வர்றதுக்கு இன்னும் எக்ஸ்டேஸ் இருக்குதே டோண்ட் வொர்ரி - டுமாரோ ஈவினிங் ஷாப்பிங் போலாம்.

VIII பின்வரும் சூழலைப் படித்து விடையளி : 3×1=3

23. மாறன் பத்தாம் வகுப்பில் படிக்கிறான். சில நாளாக அவனுடைய செயல்களில் மாற்றம் ஏற்பட்டிருப்பதைப் பெற்றோர் உணர்ந்தனர். பள்ளி நேரம் முடிந்தும் அவன் வீட்டிற்குத் தாமதமாக வருகின்றான். காரணம் கேட்டால், உண்மையைச் சொல்ல மறுக்கின்றான். வீட்டில் அடிக்கடி பணம் கேட்டுத் தொந்தரவு செய்கிறான். நல்ல நண்பர்களுடன் பழகாததே, இதற்குக் காரணம் என்று பெற்றோர் நினைக்கின்றனர்.
   அ) பெற்றோர் மாறனைப் பற்றி நினைப்பது சரியா ?
   ஆ) நாம் எப்படிப்பட்டவர்களோடு நட்பு கொள்ள வேண்டும் ?
   இ) புகைப்பிடித்தல் போன்ற ஒழுக்கக் கேடான செயல்களில் ஈடுபட உன் நண்பர்கள் உன்னை அழைத்தால் நீ எவ்வாறு நடந்துகொள்வாய் ?

IX 24. அரபு எண்களைத் தமிழெண்களாக மாற்றி எழுதுக : 25, 9, 142, 180 4×½=2

X 25. இணையான தமிழ்ப் பழமொழிகளை எழுதுக (இரண்டு மட்டும்) : 2×1=2
(i) Diamonds cut diamonds (ii) East or West, home is the best
(iii) Knowledge is power (iv) Health is wealth

XI ஏதேனும் ஒன்றினை மட்டும் எழுதுக (குறிப்புகளைக் கொண்டு) : 1×10=10

26. தமிழின் தனிச்சிறப்பு - உயிர்மொழி - செம்மொழி தமிழின் பொதுப்பண்பு
27. குடிநீர் வசதி வேண்டி நகராட்சி ஆணையருக்கு விண்ணப்பம் வரைக.

Scanned by CamScanner